REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 32உ வெள்ளி (16—8—57) ★ வெளியீடு: ஆவணி 1உ சனி (17—8—57) [இதழ் 53

'மலபார் ஸ்பெஷல் போலீஸ்'

திருச்சி, ஆக. 15—

'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' என்ற படையினர் இனி, 'சென்னை ஸ்பெஷல் போலீஸ்' என அழைக்கப்படுவர் என்றும், இந்தப் படையில் இனி தமிழர்களையே சேர்த்துக்கொள்வது என்றும் சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

மாநில புது அமைப்பிற்குப் பிறகும், மலபார் போலீசாரில் ஒரு பிரிவினர், இந்த மாநிலத்தில் இருப்பது தெரிந்ததே!

'உயிர்நிகர் இலட்சியத்தைக் கைவிடோம்'

'திராவிட நாடு கோரிக்கை தேசிய உணர்ச்சிக்கு மாறுபட்டதல்ல'

'அனுபவம் மிக்க பெரியோரின் அறிவுரைகளை வரவேற்கிறோம்'

மதுரை வரவேற்புக் கூட்டத்தில் அண்ணா

"தி. மு. கழகம் கேட்கும் திராவிடநாடு பிரிவினைக் கொள்கைக்கும் மண்டலக் குழு அமைப்புக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு அதிகமிருக்கிறது.

"திராவிடநாடு என்பது, நாம் வீட்டில் சாப்பிடும்சுட்ட இட்டிலி போன்றது. மண்டலக் குழு, சிறு குழந்தைகள் மண்ணைக் குழைத்து வைத்து இட்டிலி சுட்டு விளையாடுவார்களே, அதைப்போன்றது!

"மண்டலக் குழுவை மத்திய அரசாங்கம்தான் அமைத்திருக்கிறது; அக்குழுவுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது; எந்தக் கருத்தையும் மத்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யலாம். ஆனால் தி. மு. கழகம் கேட்கும் திராவிடநாடு அமைப்புக்குத் தனி அதிகாரங்கள் இருக்கவேண்டும். டெல்லியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மண்டலக் குழுவில் உள்ள இதர மாகாண அமைச்சர்கள் அனைவரும் இதனை வற்புறுத்துகிறார்கள்; ஆனால் சென்னை மாகாண அமைச்சர்கள் டெல்லிக்குள்ள அதிகாரத்தைப் பற்றிப் பேசுவதே கிடையாது.

"சட்டசபையில் தி. மு. கழகம் புகுந்து சில மாதங்களே ஆகின்றன; அங்கு எங்களுக்குக் கணிசமான ஆதரவும் வலுவும் கிடைத்த பின்னர் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தப்போகிறோம்."

—இவ்வாறு அண்ணா அவர்கள், 11—8—57-ல் மதுரைப் பிரமுகர்கள் சார்பில் உடுப்பி போர்டிங் லாட்ஜில் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாராட்டு விழாவுக்கு திரு. கருமுத்து-தி. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"மற்றக் கட்சிகளிடம் உள்ள நல்ல கருத்துக்களையெல்லாம் தி. மு. கழகம் ஏற்றுக்கொள்கிறது. பகைமை உணர்ச்சியை மேற்கொள்வதால் தி. மு. கழகத்திற்கு எவ்வித இலாபமும் இல்லை.

"நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தமிழர்களிடமிருந்து மறைந்துவிட்டன. இந்தி எதிர்ப்பு இயக்கம் தான், மறைந்து போன மொழிப்பற்றை மக்களுக்குத் தூண்டியது. இந்தி எதிர்ப்பு உணர்ச்சியானது மக்களிடையே தமிழில் பேச வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியிருக்கிறது.

"திராவிட நாடு என்பது தி. மு. கழகத்தின் உயிரோட்டமுள்ள பிரச்சினையாகும். அந்த அடிப்படைக் கருத்திலிருந்து ஒருக்காலும் தி. மு. கழகம் பின்வாங்கப் போவதில்லை.

"டில்லிக்கு அருகாமையிலுள்ள இமயமலையைக் காட்டி, 'அது வரையிலும் பாரதம் விரிந்து கிடக்கிறது' என்பது தேசிய உணர்ச்சி என்றால், தமிழர்களின் கண்களுக்கு அருகாமையிலுள்ள விந்தியத்தைக் காட்டி, 'அது வரை தமிழகத்தின் எல்லைகள் உண்டு' என்று கூறுவது எவ்வாறு தேசிய உணர்ச்சிகளுக்கு மாறுபட்ட கருத்தாகும்?

"தொழில் துறையிலும், அரசியல் துறையிலும், மொழித் துறையிலும் பரந்த அனுபவமுள்ள பெரியார்களின் நல்லுரைகளை வரவேற்கத் தி. மு. கழகம் தயாராக இருக்கிறது."

'சுதந்தரமாக எதையும் எண்ணுவதற்கு இடமில்லை'

கருமுத்து சுந்தரம் விளக்கம்

திரு. கருமுத்து சுந்தரம் அவர்கள், தம் தலைமையுரையில் அண்ணா அவர்களைப் பாராட்டிக் கூறியதாவது:—

"இன்றுள்ள சமுதாய அமைப்பில் மக்கள் சுதந்தரமாக எதையும் எண்ணுவதற்குஇடமில்லை. தங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களை, அவர்கள் காலத்தில் பாராட்டினார்கள் என்பதற்கு வரலாற்றில் இதுவரை இடமில்லை. சாக்ரட்டீசு போன்ற தலைவர்களே இதற்குச்சான்று. தமிழ் நாட்டிலும் பல பெரியார்கள் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டிருக்கிறார்கள். பிற்காலத்தில்தான் அந்தப் பெரியார்களின் புகழ் பரவத் தொடங்கும். தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தொண்டு செய்த ஒரு பெரியாரைப் பாராட்டுவது சிறந்ததாகும்"

'தி.மு.க. அறப்போரில் பங்குபெறத் தயார்'

நாவலர் சோமசுந்தர பாரதியார் சூளுரைக்கிறார்

டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் மக்களின் நலனுக்காக தி. மு. கழகம் நோடாத்தும் எந்த அறப்போரிலும் நான் முழுப்பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறேன்."

வி. வி. இராமசாமி

திரு. வி. வி. இராமசாமி அவர்கள் பேசுகையில், இந்திய அரசாங்கத்தால் தற்சமயம் ஏற்படுத்தப்பட்டுள்ள மண்டலக் குழுவை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளலாமென்றும் கூறினார்.

பின்னர், திருவாளர்கள் பி. இரங்கசாமி நாயுடு, டி. தர்மராசு, சந்தோசம், கே. பழனியப்பன், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் அருணாசலம், பி. பார்த்தசாரதி, ஆர். மாணிக்கம் ஆகியோர் அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

வழக்கறிஞர் திரு. பார்த்தசாரதி நன்றி கூறினார்.

★★★★★★★★★★★★★★★★★★

கலைவாணர் உடல்நிலை கவலைக்கிடம்?

சென்னை, ஆக. 16—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் உடல்நிலை சீர்கெட்டு, அவர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஈரல் நோய் காரணமாக, மருத்துவமனையில் இரண்டு நாட்களுக்குமுன் சேர்க்கப்பட்ட அவருக்கு, தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

நோய் கடுமையானதாக இருந்த போதிலும், முறையான சிகிச்சையின் காரணமாகக் குணமாகி வருவதாகத் தெரியவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★

மந்திரியை சூழ்ந்துகொண்ட 48 பெண்கள் கைது

அசாமில் சம்பவம்

கௌகாங்(அசாம்) ஆக. 15—

அசாம் மாநில மந்திரியைச் சுற்றி வளைத்துக்கொண்ட குற்றத்திற்காக 48 பெண்கள் உள்பட 50 பேர் இங்கு கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

அசாம் மாநில ரெவினியூ மந்திரியான தாஸ் என்பார், இந்தப் பிரதேசத்தில் நிலவுகிற கடும் பஞ்ச நிலைகளை நேரில் கண்டறிய வந்தார்; வந்த அவரை, சுமார் 1,000 பெண்கள் உள்பட 5,000 பேர் சூழ்ந்து கொண்டனர். பஞ்ச நிலைகளைச் சமாளிப்பதற்காக கடன் மற்றும் இதர வசதிகள் வேண்டுமென அவர்கள் கோரினர்; உடனடியாக நிவாரணம் தரவேண்டுமென வற்புறுத்தலாயினர். அவர் கூட்டத்திலிருந்து வெளியேற முடியாதவாறு அவரைச் சூழ்ந்துக் கொண்டனர். போலீசாரின் உதவியுடன் அவர், கூட்டத்திலிருந்து வெளியே வர அரைமணி நேரமாயிற்று.

இதனால் மந்திரியைச் சூழ்ந்து கொண்டு அவரை வெளியேற முடியாது செய்த 50 பேர்களை போலீசார் கைது செய்தனராம்.

மத்திய மந்திரியின் 15 நிமிட வருகைக்கு ரூ.8,000 செலவு?

சர்க்கார் சிக்கன நடவடிக்கையின் இலட்சணம்

"நமது தலைவர்களின் சிக்கன நடவடிக்கைகள் மிக விசித்திரமாக இருக்கின்றன. மைசூர் மாநில மந்திரிகள், பணம் செலவாகிற ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டனர்; வரவேற்புகள் விருந்துகள் இவற்றிற்கும் கடுமையான தடைகள் விதித்தனர்; ஆனால், அண்மையில் மத்திய மந்திரி ஒருவர் காம்தீ என்ற இடத்திற்கு ஒரு 15 நிமிட நேரம் வந்து போனதற்கு ரூ. 8,000 செலவாயிற்று என்று அறிய, மிக வருத்தமாயிருக்கிறது.

"ஒரு பைசா செலவு செய்வதில் புத்திசாலித்தனமாயிருந்துவிட்டு, ஒரு ரூபாய் செலவு செய்யும்போது முட்டாள்தனமாக நடந்துகொள்ளும் சர்க்காரின் சிக்கன நடவடிக்கைகளைப் புரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது.

"சிக்கன நடவடிக்கைகள் என்று கூறப்படும் இந்த நடவடிக்கைகளில் ஏற்படும் குழப்பம் சாதாரண மக்களுக்கு திகைப்பையே தருகிறது. மதுவிலக்கை அமுல் செய்வதால் பல கோடி ரூபாய் வருமானத்தை இழக்க வேண்டி வருகிறது; அதே நேரத்தில், வரட்டு கௌரவத்திற்காக நடத்தப்படும் அசோகா ஓட்டலின் நஷ்டத்தையும் நாம் ஏற்க வேண்டுமெனக் கூறப்படுகிறது"

என்று, கே. என். ராவ் என்பார், பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழில் ஆகஸ்டு 11-ந் தேதியிட்டு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நங்கவரம் அக்கிரமம்!

நாட்டினரே காணீர்! நியாயம்தர வாரீர்!

★

2,000

உழவர் குடும்ப உரிமைபறித்து

வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

★

23--8--57

உழவர்கள் உரிமைபெற

அறப்போர்!

★

இதயமுள்ளோரே! துணை நிற்பீர்!

—விவசாயிகள் முன்னேற்ற சங்கம், குளித்தலை வட்டம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16—8—57 வெள்ளி

ஆகஸ்டு பதினைந்து

தாயின் மணிக்கொடி கோலோச்சத் துவங்கி— வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் வடநாட்டவரிடம் இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் ஆதிபத்திய உரிமைகளைத் தந்து நேற்றுடன் பத்து ஆண்டுகள் முடிவுற்றுவிட்டன.

ஆகஸ்டு 15. ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாடப்படும் மகிழ்ச்சிக்குரிய திருநாளாக விளங்குகிறது; வெள்ளையரின் ஆதிக்கப் பிடிப்பிலிருந்து விடுபட்ட நிகழ்ச்சி இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்கு மட்டுமின்றி, உலகெங்கிலுமுள்ள விடுதலை விரும்பிகளுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய சமபவம் என்பதில் சந்தேகம் இல்லை.

வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த நிகழ்ச்சி, திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் நமக்கு, நமது இலட்சிய ஈடேற்றத்தைத் துரிதப்படுத்துமாறு தூண்டுதலும் எழுச்சியும் தர உதவுவதாகும்.

திராவிடர்களைப் பொறுத்து அவர்களின் பகைவர்களில் ஒரு கும்பலின் ஆதிக்கப் பிடிப்பு அகன்றுவிட்டது, மற்றொரு கும்பலின்—வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கப் பிடிப்பிலிருந்து அவர்கள் விடுபட்டாகவேண்டும். இந்த அடிப்படையிலிருந்துதான் இந்த ஆகஸ்டு பதினைந்து தென்னாட்டவருக்குத் தரும் மகிழ்ச்சியின் அளவு கணக்கிடப்பட வேண்டும் என்ற நமது கருத்து நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் கடந்த பத்து ஆண்டுக்கால வரலாற்றினை, விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் எல்லா அரசியல்வாதிகளும், தங்கள் தங்கள் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்திருக்கிறார்கள். எந்த அரசியல்வாதியும், அல்லது, ஆட்சியின் உச்சாணிப் பொறுப்பிலிருக்கும் எந்தத் தலைவரும், கிடைத்த 'சுதந்திரம்' மக்களுக்கு வாழ்வு பெற்றுத் தந்துவிட்டதாக பொய் புனைய முற்படாதது மகிழ்ச்சிக்குரியதுதான். கட்சி பேதமின்றி அனைவரும், 'இன்றும் வறுமை நீங்கவில்லை; மக்களின் வாட்டம் குறையவில்லை' என்பதை வெளிப்படையாகவே ஒப்பியிருக்கின்றனர். மக்களுக்கு, அவர்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைக்கூட பத்தாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சி பெற்றுத் தரவில்லை என்ற உண்மை, இயற்கையாக இந்த ஆகஸ்டு பதினைந்தாம் நாளில் மக்களின் உள்ளத்தில் எழக்கூடிய மகிழ்ச்சிப் பெருக்கை, தோன்றமுடியாதவாறு செய்துவிட்டிருக்கிறது என்பதை ஆட்சியிலிருக்கும் பெரியவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

கிடைத்த அரசியல் சுதந்திரத்தினால் ஏதேனும் பலன்கள் கிடைத்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுமானால், அவை அனைத்தும், வடநாட்டவர் அனுபவிக்கிற பலன்களாகத்தான் இருக்க முடியும்—இருக்கின்றன.

சுதந்திரம் கிடைத்ததின் பயனாக தங்கள் கையில் சிக்கிய சகலதுறை அதிகாரங்களையும், வளங்களையும் ஆற்றல்களையும் வடநாட்டவர் — டெல்லிப் பெரியவர்கள் ஒருமுகப்படுத்தி, தங்கள் இன மக்களின்—வடவரின் இன்றைய வாழ்வைத் துலங்கவைக்காவிடினும், எதிர்கால வாழ்வைப் பிரகாசமானதாக ஆக்குவதற்காகத்தான் பயன்படுத்தி வருகிறார்கள், கடந்த பத்து ஆண்டுக்காலமாக!

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தங்களுக்கு வரலாற்றில் வேறெப்போதும் கிடைத்திராத—தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் 'பெருமை'யை, அது போலியானது என்று உணராமல் நிரந்தரமானதாக்கிவிடவும், தென்னாட்டவரை, வடவரின் முழு அடிமைகளாக ஆக்கிவிடவும் தான் கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் டெல்லிப் பெரியவர்கள், 'சுதந்திர'த்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். கடந்து போன பத்து ஆண்டுக் காலத்தில் திராவிடர்கள், வடவரின் இனமொழி வெறியாட்டங்களின் கொடுமைகளுக்கும், ஏகாதிபத்திய அசுரப் பசிக்கும் தங்களையும் தங்கள் வளத்தையையும் இரைதந்து, தேரையாகத் தேய்ந்து வந்திருக்கிறார்கள். டெல்லிப் பெரியவர்கள் பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய ஒன்றே ஒன்று, வடவரின் ஏகாதிபத்திய ஆதிக்கம் தென்னாட்டில் சிரஞ்சீவி வரம் பெறுவதற்கான முயற்சிகளை பல வழிகளிலும் மேற்கொண்டிருப்பது தான்!

இந்த உண்மை, உள்ளத்தைக் குடைவதிலிருந்து தப்புவதற்கு முயற்சிக்கிற எந்த தென்னாட்டு அரசியல்வாதியும் இதுவரை தப்பவில்லை—தப்ப முடியவில்லை.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கென்ற அறிவிப்புடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பிரும்மாண்டமான திட்ட முயற்சிகள் அனைத்தும் 'வடநாட்டவரை வாழ்விக்கத்தான் என்ற நிலை வேறு, மேற்கண்ட உண்மைக்கு அரணாகியிருக்கிறது. அதனால்தான் திராவிடர்கள் இன்னும் முழு விடுதலை பெறவில்லை என்று தென்னாட்டவர் கருதுகின்றனர்.

'விடுதலை' என்ற சொல்லின் பொருள், ஆகஸ்டு—15' என்ற அளவோடு அடங்கிவிட்டது என்று சாதிக்க முயன்றோம், பத்தாண்டுக்கால வரலாற்றைப் பார்த்தபின் தெளிவு பெற்று வருவதைக் காண்கிறோம்.

மேலும் பலரும் தெளிவுபட, இந்த ஆகஸ்டு பதினைந்து துணை புரிய வேண்டுமென விழைகிறோம்.

1857-ம் ஆண்டுச் சம்பவங்களுக்கு 'விடுதலைப் போரின் துவக்கம்' என்ற அந்தஸ்தைத் தந்து இந்த ஆகஸ்டு பதினைந்தில் நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறார்கள் — தங்களின் தேசிய பாரம்பரியத்திற்குப் பெருமை தேடுகிறார்கள். ஆனால், திராவிடர்கள் மட்டும் தங்களின் பாரம்பரியம், பண்பாடு, வரலாறு இவற்றை மறந்துவிட வேண்டும் என்பது அநியாயமானதல்லவா?

எனவே, வெள்ளையர் வெளியேறிய ஆகஸ்டு பதினைந்தை மகிழ்ச்சியோடு நினைவு கூறும் திராவிடர்கள், தாங்கள் வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுதலை பெறும் நாளைத்தான் ஆவலோடு எதிர் பார்த்துக் கிடக்கின்றனர்.

170 ஆண்டு அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி!

ஆக. 31-ல் சுதந்திரக்கொடி பறக்கும்

பதினைந்தாவது நாடாக பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெறுகிறது மலேயா!

171 ஆண்டுகளுக்குப் பிறகு, இவ்வாண்டு ஆக. 31-ந்தேதியன்று மலேயா விடுதலை பெறப்போகிறது; யூனியன் (பிரிட்டிஷ்) கொடிக்குப் பதிலாக அன்று, மலேயா 'சமஷ்டி' அரசின் 'பிறைக் கொடி' பறக்கும்.

ஆதிக்க நாட்டினிடமிருந்து சென்ற நூறு ஆண்டுகளில் பதினைந்து நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன; இந்த வரிசையில், கடைசியாகவரும் நாடு மலேயாவாகும்!

மலேயாவிலுள்ள ஒன்பது சமஸ்தானங்களும் இரண்டு குடியிருப்புப் பகுதிகளும் சேர்ந்து 'சமஷ்டி அரசியல்' ஏற்படுகிறது.

பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள மலேயா நாடு 50,690 சதுர மைல்கள் பரப்புள்ளது.

இலங்கையைப்போல இருமடங்கு பரப்புள்ள இந்த நாட்டில் ஐந்தில் நான்கு பகுதிப் பிரதேசம் காடும் மலையும் நிறைந்தது. இரப்பரும், ஈயமும் நாட்டின் ஜீவாதாரச் செல்வம்.

தென்னந் தோப்புக்களும், நெல் வயல்களும், ஈயச் சுரங்கங்களும், இரப்பர் தோட்டங்களும் நிறைந்த இந்த நாடு, தென்கிழக்கு ஆசியாவிலேயே வளமுள்ளதாகும்.

1955—ம் ஆண்டுக் கணக்குப்படி நாட்டு மக்களின் எண்ணிக்கை மொத்தம் 60,58,317; மலேயர்கள்—29,67,233; சீனர்-22,86,883 இந்தியர்-7,13,810; பிறநாட்டினர்-90,391.

இரண்டாவது போர் முடிந்து, ஜப்பானிய ஆதிக்கத்திலிருந்து நாடு மீண்டதும், அரசியல் விழிப்பு ஏற்பட்டது. இடையூறுகள் பல ஏற்பட்டாலும் அரசியல் முன்னேற்றம் தடைப்படவில்லை 1948-ல் சமஷ்டி நிர்வாகம் ஏற்பட்டது. நியமன அங்கத்தினர்களுள்ள சட்டசபை ஏற்பட்டது. 1951-ல் மந்திரி சபை நிர்வாகத்திற்கான பூர்வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இனத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் நிர்வாகப் பொறுப்பேற்றார்கள்.

சுயாட்சிப் பாதையில்.....

1955-ல் புதியதோர் சமஷ்டி அரசியல் திட்டம் அமுலாயிற்று. இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையும், சட்டசபைக்கு அடங்கிய மந்திரி சபை ஆட்சியும் தோன்றின. மக்கள் கூட்டுக் கட்சியின் தலைவரான தெங்கு அப்துல் ரெஹ்மான் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

தேசிய இயக்கம் வளர்ந்தது; நாடு சுயாட்சியும் சுதந்திரமும் பெறுவதுபற்றி மலேயாவிலுள்ள சிற்றரசர்களும், மலேயா சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் கலந்தாலோசித்தனர். காமன்வெல்த்திற்குள் சுதந்தரமாக வாழும் உரிமை மலேயாவுக்குக் கிடைத்தது. புதிய அரசியல் திட்டம் உருவாயிற்று.

புதிய அரசியல் திட்டப்படி, மலேயா சிற்றரசர்கள், தங்களில் ஒருவரை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்; நாட்டின் தலைவர் (யாங்-தி-பெர்துவான்-அகாங்) ஐந்தாண்டுக் காலம் பதவியிலிருப்பார். மக்கள் பிரதிநிதி சபையில் செல்வாக்குள்ள ஒருவரை, நாட்டின் முதன் மந்திரியாகத் தலைவர் நியமிப்பார். முதல் மந்திரியின் ஆலோசனைக்கிணங்க மந்திரி சபை நிறுவப்படும். தலைவர், பொதுவாக மந்திரி சபையின் ஆலோசனைக்கிணங்கியே நிர்வாகத்தை நடத்துவார்.

பாராளுமன்றத்தில் மேல்சபை (திவான் நெகாரா), மக்கள்சபை (திவான் ரா அயாத்) என இரு சபைகளுண்டு.

மேல்சபையில் 38 உறுப்பினர்கள் இருப்பர்; இவர்களில் 22 பேர் மாநிலங்களால் (மாநிலத்திற்கு இருவர் வீதம்) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் நியமன உறுப்பினர்கள்.

மக்கள்சபையில் 100 உறுப்பினர்கள் இருப்பர்; இவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே! வயதுவந்த அனைவரும் தேர்தலில் கலந்துகொண்டு, மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர்.

சுதந்தர தினத்திற்கு முன்பு—குடி உரிமையுள்ளவர்களுக்கும், அந்த நாளுக்குப் பிறகு நாட்டில் பிறப்பவர்களுக்கும் குடி உரிமையுண்டு. மலேயா சமஷ்டியிலுள்ள அனைவருக்கும் 'காமன்வெல்த் குடிமகன்' அந்தஸ்து உண்டு.

நீதி—நிர்வாகப் பிரிவுகள் தனித்து இயங்கவும், புதிய சமுதாயத்தில் மலேயர்களுக்கு உரிய பாதுகாப்புத் தரவும், மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காக்கவும் அரசியல் திட்டத்தில் தகுந்த ஏற்பாடு உண்டு.

சமுதாய முன்னேற்றம்

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களும், வியாபாரிகளும், விஞ்ஞானிகளும், நிர்வாகிகளும் மலேயாவில் குடியேறினார்கள். அவர்களுடைய அறிவினாலும் உழைப்பினாலும் நாடு முன்னேறிற்று. நாட்டு மக்களுடன் கூடி உழைத்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியதுடன், எல்லாரும் இன்புற்று வாழ வழிசெய்தார்கள். மக்களுடைய கூட்டுறவால் சமுதாய முன்னேற்றம் காண்பதும் சாத்தியமாயிற்று. தென்கிழக்கு ஆசியாவில் வாழ்க்கைத்தரமும் சமுதாய முன்னேற்றமும் சிறப்பாகயிருப்பது மலேயாவில்தான்.

ஆகஸ்டு மாதம் 31-ந் தேதியன்று ஆட்சி மாற்றம் ஏற்படும்; நாடு விடுதலைபெறும்.

காட்டு மிருகங்களின் மூர்க்கத்தனம்!

ஒழித்துக்கட்டத் திட்டம்

இரண சிகிச்சைமூலம் கொடிய மிருகங்களையும் நல்ல மிருகங்களாக மாற்றும் ஒரு திட்டத்தை கலிபோர்னியா பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.

மனிதனின் உணர்ச்சியை நன்கு அறிந்துகொள்ள விஞ்ஞானிகளுக்கு சந்தர்ப்பமளிக்க இத்துறையில் நடத்தப்படும் ஆராய்ச்சி உதவுமாம்.

மூளையில் ஜீவ அணுக்களில் குறிப்பிட்ட சிலவற்றை ஒழிப்பதன்மூலம் காட்டு மிருகங்களின் மூர்க்கத்தனத்தை ஒழிக்க முடியுமென நம்பப்படுகிறது.

சிபாரிசுகள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டாக, சுவிட்சர்லாந்தில் ஜெர்மன், பிரெஞ்சு, சுவிஸ் மொழிகளும்; பெல்ஜியத்தில் ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளும்; இத்தாலியில் இத்தாலியன், பிரெஞ்சு, ரோமான்சு மொழிகளும்; கனடாவில் பிரெஞ்சும் ஆங்கிலமும் ஆட்சி மொழிகளாக உள்ளன. ரஷ்யாவில் கூட ஆறு மொழிகள் அரசியல் மொழிகளாக விளங்குகின்றன.

"இந்தியாவில் உள்ள ஒரு மாவட்டத்தின் பரப்பும், மக்கள் தொகையும் கொண்ட சுவிட்சர்லாந்தில் மூன்று அரசியல் மொழிகள் இருப்பின் 40 கோடி மக்கள் வாழும் பெருந் துணைக்கண்டமாகிய நம் நாட்டில் பதினைந்து ஆட்சி மொழிகள் இருப்பதில் தவறொன்றும் இல்லை.

"ஒவ்வொரு இந்தியனும் தன் தாய் மொழியோடு வேறு சில வட்டார மொழிகளைப் பயிலின் இடர்ப்பாடுகளுக்கு மாறாக ஒற்றுமையும் நல்லெண்ணமுமே நாட்டில் பெருகும்.

"இன, கல்வித்துறையை எடுத்துக்கொண்டாலும், ஆங்கிலமோ அன்றி இந்தியோ பொதுப்பாட மொழியாக இருக்க முடியாது. தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வட்டார மொழியே பாடமொழியாக இருப்பதால் பல்கலைக் கழக நிலையிலும் அம்மொழியே தொடர்ந்து பாட மொழியாக இருந்தால் மாணவர்களுக்கு ஏற்படும் அவசியமற்ற இடர்ப்பாடுகள் அகல்வதுடன் பாடங்களை நன்கு புரிந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்.

"ஒரு மாநிலத்தில் பயிலும் மாணவர்கள் மற்றவர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய சட்டாயம் ஏற்படின் ஓரிரு வட்டார மொழிகளையோ, அன்றி இந்தியையோ, ஆங்கிலத்தையோ அவர்கள் துணைப்பாடமாக வேனும் விருப்பப் பாடமாக வேனும் பயின்று கொள்வதில் தடையொன்றும் இல்லை.

"எனவே, பயனற்ற முயற்சியை விரைந்து மேற்கொண்டு இந்தியை மட்டும் ஆட்சி மொழியாகவும், பிறகு மறைமுகமாகப் பல்கலைக் கழகப் பாட மொழியாகவும் செய்ய முனைந்து, நாட்டில் குழப்பத்தையும், பகையையும், பிரிவு மனப்பான்மையையும் ஏற்படுத்தாது, பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாகவும், வட்டார மொழிகளை அவ்வப் பகுதிகளில்—பல்கலைக் கழகம் உள்ளிட்டு—பாட மொழியாகவும் இந்திய அரசாங்கமும், மாநில அரசினரும் ஒன்றுபட்டுச் சட்டமுறையில் செயற்படுத்தினால் பாரினில் நல்ல நாடாகப் 'பாரதம்' விளங்கும் என்பதில் ஐயமில்லை."

'சிபாரிசுகள் விவேகமற்றவை; ஆத்திரமூட்டுபவை'

முதலில் இந்தி தகுதி பெறட்டும்; பின்னர் ஆட்சிமொழியாக்கலாம்'

அவசரப்படுவது ஆபத்தானதாகும்'

ஆங்கிலம் நீடிப்பதால் குடிமுழுகி விடாது'

இந்தித் திணிப்புக் குழு அறிக்கைக்கு தமிழ் நாட்டு இதழ்கள் தரும் 'வரவேற்பு'

இந்தியப் பேரரசு நியமித்த மொழிக் குழுவின் சிபாரிசுகள் அமுல் செயப்பப்பட்டால் விளையக்கூடிய கேடுகளை தமிழ்நாட்டிலுள்ள ஏடுகள் விளக்கியுள்ளன; அவைகளில், சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் இங்கு தருகிறோம் :—

'தினமணி'

''இப்பொழுது இந்தி வளம்பெறுத நிலையில் இருக்கிறது. தமிழ், வங்காளி, மராத்தி, குஜராத்தி போன்றவைகளைவிட அதன் கருத்துச்செறிவு மட்டமாகவே இருக்கிறது. இந்நிலையில, அகில-இந்திய விவகாரங்களில் அதைப் பயன்படுத்தத் தொடங்கினால் நன்மையை விடத் தீமைதான் அதிகமாக ஏற்படும்.

''கன்றுக்குட்டிகளைக் கட்டித் தாம்பு அடித்தால் செல்லும் ஆகாது; வைக்கோலும் ஆகாது', என்று தமிழ்நாட்டில் சொல்லுவார்கள். அந்தக் கன்றுக்குட்டி நிலையில் இருக்கிறது இன்றைய இந்தி!

''இந்தியர்களில் பாதிப் பேர்களுக்குமேல் பேசும் பாஷை என்பதற்காக, அது தேச பாஷையாவதற்கு பிறமொழியினர் அரசியல் நிர்ணய சபையில் இணங்கினர். ஆனால், பெரும்பாலோர் பேசுகிறார்கள் என்பதாலேயே அகில-இந்திய ஆட்சி மொழியாவதற்கான தகுதியை அது அடைந்து விட்டதாகக் கருதமுடியாது.

''இந்தியானது, அதைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளவர்களின் பாஷை என்ற குறுகிய அந்தஸ்திலிருந்து மாறி, எல்லா மொழியினரும் ஏற்றுக்கொள்ளும் தேசிய அந்தஸ்தை அடையப் போவதால், இந்திக்காரர்கள் பொறுமையுடன், பிறரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு முன்னேறப் பார்ப்பதுதான் விவேகம். முழுத் தகுதியை அது முதலில் பெற வேண்டும். அது இந்தி ராஜ்யங்களில் நடக்கட்டும்.

''இரண்டாவதாக, அதை அகில-இந்திய ஆட்சி மொழியாக்கும் கிரமத்தையும் திட்டத்தையும் நிர்ணயிக்கும் பொறுப்பை, டாக்டர் சுப்பராயன் எடுத்துக் காட்டியிருப்பதுபோல, பிறமொழி ராஜ்யங்களுக்கு விட்டுவிடுவதுதான் நியாயம். 1960-ம் ஆண்டில் மற்றொரு அரசாங்க மொழிக் கமிஷனை நியமிக்க வேண்டியிருக்கும். இந்த ராஜ்யங்களில் காணப்படும் அபிவிருத்தியை மதிப்பிட்டு, மேற்கொண்டு என்ன தேவை என்பதையும் நிர்ணயிக்கும் பொறுப்பை அந்தக் கமிஷனுக்கு விட்டுவிடுவதுதான் நல்லது. இடைக்கால ஏற்பாடாக அகில - இந்திய அடிப்படையில் இந்திய சர்க்கார் எதையும் இப்பொழுது செய்யவேண்டியதில்லை என்பதே எமது திடமான அபிப்பிராயம்.

''பிறமொழியாளரின் பயங்களையும், சந்தேகங்களையும், உணர்ச்சிகளையும் அலட்சியம் செய்வதற்கில்லை. அப்படிச் செய்வது ஆபத்தானது.

''நமது தலைமுறையிலேயே அல்லது அடுத்த ஐந்து பத்து ஆண்டுகளிலேயே இந்தியை டில்லியில் அரியாசனத்தில் ஏற்றிவிட நினைப்பது மதியீனம். அது மொழிச் சேவையோ, தேச பக்த பணியோ ஆகாது. அதன் இயற்கையான வளர்ச்சிக்குத் துணை புரிவதுதான் பொறுப்புள்ளவர்களின் கடமை.

''இந்தி மொழியை அவசரக் கோலமாக ஆட்சி மொழியாக்கப் பார்த்து, தேச ஐக்கிய உணர்ச்சிக்குப் பாதகம் விளைவிக்கவே கூடாது. தேச ஐக்கியத்தின் தேவைகள்தாம் முதன்மையானவை; இந்தி ஆட்சி மொழியாவது இரண்டாம்பட்சமான விஷயம்.

''கமிஷன் தன் யாதாஸ்தில் கூறியிருப்பதுபோல மொழி விஷயத்தில் நிதானமிழப்பது கூடாது.

''மொழி மிகமிக முக்கியமே; ஆனால் அதைவிட முக்கியம் அதன் மூலம் அடையும் கல்வி கேள்விகளும் ஞானமும், எந்த மொழியில் ஆட்சி நடக்கிறது என்பது முக்கியமே; ஆனால், அதைவிட முக்கியம் நல்லாட்சியை உறுதிசெய்வது. கோர்ட்டில் பேசப்படும் மொழி முக்கியமே; ஆனால் அதைவிட முக்கியம் அங்கு வழங்கப்படுவது நியாயமாக இருக்கவேண்டும் என்பது. எனினும், சாதாரணமாக மொழித் தகராறு மக்களை உணர்ச்சி வசப்படுத்துகிறது என்பதை அலட்சியம் செய்வதற்கில்லை. இதை கருத்திற் கொண்டுதான் பார்லிமெண்ட் நியமிக்கப்போகும் 20 பேர் கொண்ட கமிட்டியானது யாதாஸ்தைப் பரிசீலனை செய்யும் என்று நம்புகிறோம்.''

★

'நவ இந்தியா'

''கல்வித்துறையில், அது சமர்ப்பித்துள்ள ஒரு சிபாரிசு விசித்திரமாக இருக்கிறது. இப்போது செகண்டரி பள்ளிகளில் போதிக்கப்படும் ஆங்கிலத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை என்று கூறுகிறது.

''ஆங்கிலம் இன்று சர்வதேச மொழியாக விளங்குகிறது. உலக மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், நவீன விஞ்ஞான முன்னேற்றம் முதலானவற்றைத் தெரிந்துகொள்ளவும் அது இன்றியமையாததாக இருக்கிறது. ஆகையால் அதன் போதனைக்கு இனி மேலும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம். கல்வித் துறையில் மிகுந்த ஈடுபாடும், அனுபவமும் கொண்ட பேரறிஞர்கள் இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். செகண்டரி பள்ளிகளிலும்சரி —சர்வகலாசாலை கட்டத்திலும் சரி — அந்தந்தப் பிரதேச மொழிகள் போதனை மொழிகளாக இருந்தாலும், ஆங்கிலத்துக்குரிய முக்கியத்துவம் மட்டும் குறையக்கூடாது.

''நாட்டிலுள்ள 14 மொழிகளுக்கிடையிலும் நெருங்கிய ஒற்றுமை ஏற்பட ஒரு பொது லிபி இருப்பது நல்லது என்று கமிஷன் கூறுகிறது. அதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். பொது லிபி இருந்தால், பிற மொழிகளைக் கற்பது சுலபமானது; ஆனால், அதற்கு தேவநாகரிதான் பொது லிபியாக இருக்கவேண்டும் என்று கமிஷன் கூறுவதை மட்டும் நம்மால் ஒப்புக்கொள்ளமுடியாது.

''தேவநாகரியில் இந்தி இருக்கிறது என்பதற்காக அதையே இந்தியா முழுதும் விஸ்தரிக்க வேண்டியதில்லை. கற்றுக்கொள்ளுவதற்கு சுலபமானது எது என்பதுதான் முக்கியமானது. இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கையில், தேவநாகரியைக் காட்டிலும் ஆங்கிலம் வழங்கும் ரோமன் லிபி பொருத்தமானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

''பெரும்பாலோர் பேசுகின்ற பாஷை என்பதற்காகவே இந்தியை அகில இந்திய மொழியாக கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. ஆனால், தேசிய மொழியாவதற்கு இந்த ஒரு அம்சம் மட்டும் போதுமானதல்ல; அரசாங்க மொழியாவதற்குரிய இதர தகுதிகளும் முக்கியமானவை. கமிஷன் மெம்பர்களில் ஒருவரான டாக்டர் சுப்பராயன் தமது தனிக் குறிப்பில் கூறியுள்ளது போல, அது பொருளாதார, தொழில் முன்னேற்றத்துக்குச் சாதகம் விளைவிக்குமா என்பதையும் கவனிக்க வேண்டும்.

''சரியான கலைச் சொற்களும், தகுந்த நூல்களும் வெளியாவதற்கு வசதிகள் ஏற்படாதவரை, இந்தியை தேசிய மொழியாக்குவது நிச்சயம் இடையூறில்தான் முடியும்.

''முதலில், ஆட்சி மொழியாவதற்குரிய தகுதியை இந்தி பெறட்டும்; அதன்பிறகு வேண்டுமானால் அதை அரசாங்க மொழியாக்கிக் கொள்ளலாம்.

''இது விஷயத்தில் உணர்ச்சிகளுக்கு இடமளிப்பது வீண் கஷ்ட நஷ்டங்களைத்தான் உண்டாக்கும். ஆகையால், தேசிய மொழி விஷயத்தில் நிதானத்தைப் பின்பற்றுவதே சிலாக்கியமானது.

''இன்னும் சில பல வருடங்களுக்கு ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து நீடிப்பதால், நன்மையே தவிர, ஒன்றும் குடிமுழுகி விடாது''

★

'சுதேசமித்திரன்'

''இந்தியாவைப் போன்ற ஒரு பன்மொழி நாட்டில் ஒரு பாஷையை மத்திய சர்க்காரின் பாஷையாக அமுலுக்குக் கொண்டுவருவதில், சில அம்சங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

''முதலாவது—தேசிய ஐக்கியத்துக்கு ஊறு விளையவிடாதிருப்பது; நிர்வாகம் மேலும் திறம்பட வகை செய்வது இன்னொன்று; சமுதாயத்தில் எல்லாப் பகுதிகளிடையும் அறிவு வளர்ச்சி ஏற்பட வசதி செய்வது மற்றொன்று; இறுதியாக எல்லா ஜனங்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சமவாய்ப்புக் கிடைக்கச் செய்வது.

''இவ்வளவுக்கும் உலைவைக்கக் கூடியவாறே கமிஷனின் சிபாரிசுகள் அமைந்திருக்கின்றன.

''மொழிவிஷயத்தில் ஜனங்களுக்குள்ள உணர்ச்சி எத்தகையது என்பதை ராஜ்யப் புனரமைப்பு அறிக்கை வெளியான போது கண்டோம். எனினும் அதிலுள்ள படிப்பினையை கமிஷன் கவனத்தில் கொள்ளவில்லை.

''இந்தி இன்னும் அரசாங்க நிர்வாகத்திற்கு ஏற்ற மொழியாக உபயோகப்படுவதற்கான தேர்ச்சி பெறவில்லை. அத்தகைய தேர்ச்சி பெறும்வரை இப்போதுபோல் யூனியன் விவகாரங்களில் ஆங்கிலம் கையாளப்படுவதுதான் பொருத்தம் என்பதை அறிஞர்கள் பலர் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். எனினும், யூனியன் சர்க்கார், விவகாரங்கள் அனைத்தும், இந்தியில் நடக்கக்கூடிய நாள் வெகு சமீபத்தில் இருப்பது போல், மொழிக் கமிஷன் திட்டம் வகுத்திருக்கிறது.

'''இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் மத்திய சர்க்காரில் உத்தியோகம் கொடுக்க வேண்டும்; ஏற்கனவே அந்த உத்தியோகத்திலிருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அம்மொழியைக் கற்காவிட்டால் அவர்களைத் தண்டிக்க வேண்டும்' என்பவை போன்ற சிபாரிசுகள், இந்தி தெரியாத ராஜ்யங்களில் ஆத்திரமூண்டாக்கும்.

''இரயில்வே, தபால்—தந்தி, வருமான வரி முதலிய இலாகாக்களில் இந்தி, பிரதேச மொழி இரண்டிலும் விவகாரங்கள் நடக்க அக்கமிஷன் சொல்லியுள்ள யோசனை பெருஞ்செலவில் வீண்குழப்பமுண்டாக்கும்.

''சட்டங்களையும், சுப்ரீம் கோர்ட்டு, ஐகோர்ட்டுகள் இவற்றின் தீர்ப்புகளையும் இந்தியில் வெளியிடுவதுபோன்ற யோசனைகளும் பிரத்தியட்ச உணர்வுடன்கூடிய யோசனையன்று.

'''யூனியன் சர்க்கார் உத்தியோகங்களுக்கான பரீட்சைகள் இந்தி மொழியிலேயே நடைபெற வேண்டும்' என்பது கமிஷனின் மற்றொரு சிபாரிசு; இதன்படி, இந்தி தெரிந்தவர்கள் இந்தி பேசும் ராஜ்யங்களில் மட்டுமின்றி, இந்தி பேசாத ராஜ்யங்களிலும் அத்தகைய பரீட்சைகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்; இந்தி பேசாத ராஜ்யங்களுக்கு இது எவ்வளவு பெரிய அநீதியெனச் சொல்லத் தேவையில்லை.

''...இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகளின் அபிப்பிராயத்தை அறியாமல் எவ்வித நிர்ப்பந்த முறையையும் கையாளுவது வீணாக அனர்த்தத்திலேயே போய்முடியும்.''

★

'தமிழ் நாடு'

''இந்தியாவின் தேசிய மொழிகள் என சட்டமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்ட பதினைன்கு மொழிகளையும் இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்வதே, மொழிவழித் தோன்றும் பிணக்குகளையும், பகை உணர்ச்சிகளையும் போக்கும் சிறந்த சாதனமாகும்.

''பல மொழிகளை அரசியல் மொழிகளாக ஏற்றுக்கொள்வதில் புதுமையோ இடர்ப்பாடுகளோ எவையும் இல்லை.

''உலகின் பல்வேறு நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ளன. எடுத்துக்

(2-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பன்மொழிப் புலவர் பொன்விழா

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொதுநலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்—போராடவும்—தடியடி தாங்கவும்——சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன்விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பிடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பிடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்கவேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பண முடிப்பைப் பரிசாக வழங்கவேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக்குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினை கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற அண்ணா அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி தந்து உதவுவோர்,

'சி. என். அண்ணாதுரை, C/O 'நம் நாடு'
24, சூரியநாராயண செட்டித் தெரு,
இராயபுரம், சென்னை-13.'

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுற பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

24—7—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாணவர்கள் அறப்போர் வலுக்கிறது

போலீசார் கண்ணீர்ப்புகையை நாடுகின்றனர்

மக்கள் சபை உறுப்பினர் உண்ணாவிரதம்

ஜெய்ப்பூர், ஆக 15—

இராஜஸ்தான் மாநிலமெங்கும் பள்ளிக் கட்டண உயர்வை எதிர்த்து மாணவர்கள் நடத்திவரும் கிளர்ச்சி, கொடிய அடக்கு முறைகளுக்குப் பின்னும் நாளுக்குநாள் வலுத்து வருகிறது.

நேற்று முன்தினம், இங்கு சர்க்கார் தலைமை அலுவலகத்தின் முன் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களைப் போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்துக் கலைத்திருக்கின்றனர்.

இன்று சுதந்திர தினம் என்ற போதிலும் மாணவர்கள், தங்கள் ஊர்வலத்தில் கருப்புக் கொடிகளுடன் கலந்துகொண்டிருக்கின்றனர்.

எம்.பி. உண்ணாவிரதம்

மக்கள் சபையில் சுயேச்சை உறுப்பினரான ஹரிஷ்சந்தர் என்பார் இங்கு 'மானிக் சௌக்' என்ற இடத்தில் இன்றுமுதல் உண்ணாவிரதம் துவங்கியிருக்கிறார். அவர், போலீசார் மாணவர்கள்மீது அளவுகடந்த அடக்குமுறை பிரயோகிப்பதாகவும், போலீசாரின் செயல் வரைகடந்தது என்றும், மாணவர்களின் பள்ளிக் கட்டணத்தை உடனடியாகப் பழைய நிலைக்குக் குறைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

5,000 சதுரமைல் வெள்ளக் காடாகியது

50,000 பேர் பாதிக்கப்பட்டனர்

பாட்னா, ஆக. 15—

பூர்ணியா மாவட்டத்தில் சுமார் 5,000 சதுரமைல் பகுதி வெள்ளக் காடாகிவிட்டதாகத் தெரிகிறது.

இதனால் 50,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனராம்; ரூ. 1,20,000 மதிப்புள்ள நெற்பயிரும், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள சணல் முதலிய பயிர்களும் சேதமடைந்துள்ளதாம்; 1,000 வீடுகள் மண்மேடாகிவிட்டதாம்!

இதனால் உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டதுடன், குடிதண்ணீருக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம்.

12 மாத காலத்தில் இந்திய வர்த்தகக் கார்ப்பொரேஷன் மொத்தம் ரூ. 54,55,00,060 மதிப்புள்ள உள்நாட்டு சிமெண்டு வாங்கியுள்ளதாம்.

'1956-57-ம் ஆண்டில், 32 பல்கலைக் கழகங்களுக்கு மொத்தம் ரூ. 3,18,00,073-10-0 மானியங்களாக வழங்கப்பட்டது' என்று மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள்

சர்க்கார் உத்தரவு

புதுடில்லி, ஆக. 15—

சர்க்கார் வேலைகள் ஒப்புவிக்கப்பட்டுள்ள மத்திய பொது மராமத்து இலாகாவின் கண்டிராக்டர்கள், இனிமேல் தங்களுடைய தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக் காலனிகளை அவர்களே கட்டித் தரவேண்டும். அக்காலனிகளில் சமையலறைகள், குளிக்கும் அறைகள், கை, கால் கழுவும் இடங்கள் முதலியவைகளும், பொதுக் கக்கூசுகள் முதலிய வசதிகளுமுள்ள குடிசை வீடுகள் அமைக்கப்படவேண்டும். குடிதண்ணீர் வசதி, தெரு விளக்கு வசதி, இட சுத்திகரிப்பு வசதிகள் ஆகியவைகளுக்கு அக்கண்டிராக்டர்களே ஏற்பாடுகள் செய்துதரவேண்டும்.

'மத்திய சர்க்காரின் அனுதாபமும் உதவியும் கிடைக்கும்'

கேரள மக்களுக்கு குடியரசுத் தலைவர் உறுதிமொழி

திருவனந்தபுரம், ஆக. 15—

"உங்கள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கான உங்கள் முயற்சிக்கு, மத்திய சர்க்காரின் அனுதாபமும் உதவியும் கிடைக்கும் என்று நீங்கள் நம்பலாம்" என்று குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் அவர்கள், கேரள மக்களுக்கு சுதந்திர தின விழாக் கூட்டத்தில் உறுதியளித்திருக்கிறார்.

"கேரளத்தை இன்று எண்ணற்ற பெரும் பிரச்சினைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் உடனடியாகப் பரிகாரம் தேடியாக வேண்டும். உங்கள் சர்க்கார் அந்தப் பிரச்சினைகளுக்கு உற்சாகத்தோடும், சேவை மனப்பான்மையோடும் பரிகாரம் தேட முற்பட்டிருப்பது காண மகிழ்கிறேன்."

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வாண வேடிக்கையில் நேரிட்ட விபரீதம்

மூன்று குழந்தைகள் பலியாயின

பெங்களூர், ஆக. 15—

சுதந்திரதின விழாவையொட்டி மைசூர் நகரில் நடைபெற்ற வாண வேடிக்கை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்ட வாண வெடி ஒன்று ஆகாயத்தில் பாய்ந்து வெடிப்பதற்குப் பதிலாக, திடீரென்று தீப்பற்றி, கூடியிருந்த கூட்டத்தினர் மீது விழுந்துவிட்டதாம்; இதனால் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டன என்றும், 32 பேர் காயமடைந்தனர் என்றும் தெரியவருகிறது.

'பத்திரிகை' பக்க விலை கட்டுப்பாடு

மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, ஆக 15—

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் பத்திரிகை பக்க விலைக் கட்டுப்பாடு பிரச்சினையில், சர்க்கார், ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடுமாம்!

இதுபற்றி மக்கள்சபையில் தகவல் தந்த மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சர், இப்பிரச்சினை பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை சர்க்கார் பரிசீலித்தனரென்றும், பக்க விலை பட்டியலை சர்க்கார் தயாரித்துவருகின்றனர் என்றும் கூறினர்.

'பத்திரிகையின் விலை பற்றி மூன்றுவித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன; முழுமையிலுமாக இவற்றை சர்க்கார் ஏற்பதென்பது சாத்தியமல்ல; ஆனால், இவற்றிலுள்ள வித்தியாசத்தைக் குறைக்கமுடியும்' என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாட்டின் உபயோகத்துக்குமொத்தம் 1,90,000 டன் செம்பு தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

நகரங்களுக்கு ரூ. 1,000 கோடியாம்

கிராமங்களுக்கு ரூ. 10 கோடிதானாம்!

மத்திய அரசின் வீடுகட்டும் திட்டம்

டில்லி, ஆக. 15—

இந்திய அரசாங்கத்தின் புதிய வீட்டு வசதிக் கொள்கை பற்றி மக்கள் சபையில் மத்திய மராமத்து—வீட்டு வசதி, அமைச்சர் தகவல் தந்துள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நகரங்களில் வீடு கட்ட ரூ. 1,000 கோடி செலவிடப்படுமாம்!

இதே காலத்தில், 10,000 கிராமங்களில் வீடுகள் கட்ட ரூ. 10 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாம்!

இத்தொகை மாநிலங்களுக்குப் பகிர்ந்து தரப்படுமாம்; வீடுகட்டும் நிறுவனங்கள் இந்தத் தொகையை செலவிடுமாம்!

தனியார் நிறுவனங்கள், மாநில அரசாங்கங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்குக் கடனுதவியும், மானியமும் மத்திய அரசு தருமாம்; சில ஆர்ஜிதத்திற்கும் உதவி புரியுமாம்!

முதலில் 500 கிராமங்களில் மட்டுமே திட்டம் நிறைவேற்றப்படுமாம்; பிறகு, 15,00 கிராமங்களிலும் 1959-60ல் 3,000 கிராமங்களிலும், 1960—61-ல் 5,000 கிராமங்களிலும் திட்டம் நிறைவேற்றப்படுமாம்.

கிராம மக்கள் உழைப்பின் மூலம் பாதித்தொகையைச் செலவில் ஈடுசெய்ய வேண்டுமாம்; வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கிராமங்களுக்கு முதல் சலுகை தரப்படுமாம்.

இந்த ஏற்பாட்டில் சென்னைக்கு எவ்வளவு கிடைக்கும் என்றும், எந்த அடிப்படையில் பணம் பகிர்ந்து தரப்படும் என்றும் தெரியப்படுத்தவில்லை.

★★★★★★★★★★★★★★★★★★

கடைசி வேண்டுகோள்

குளித்தலையில் மாபெரும் விவசாயிகள் அணிவகுப்பு

★

22—8—57 மாலை 6 மணிக்கு குளித்தலை திரு. வி. க. திடலில்

மு. கருணாநிதி

தலைமையில்

அண்ணா

பேசுவார்

—திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★

முக்கிய அறிவிப்பு

★

நங்கவரம் உழவர் அறப்போரை முன்னிட்டு, நான், தொகுதியில் தங்கிட வேண்டியிருப்பதால் ஒத்துக்கொண்டுள்ள பொதுக்கூட்டம், திருமண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாதவனாக இருப்பதோடு, மாற்றுத் தேதிகளை விரைவில் தருகிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

மு. கருணாநிதி

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம்

✶

"18—8—57 காலை 9 மணிக்கு செங்கற்பட்டு மாவட்ட செயற்குழுக் கூட்டம் ஆரணி தி.மு. கழகப் பணிமனை மாடியில் நடைபெறும்.

"பொருள் :—புதிய கழகங்களை அங்கீகரித்தல்; வரவு-செலவுக் கணக்கு பரிசீலித்தல்; மாநாடு நடத்துவது பற்றி முடிவெடுத்தல்; மற்றும் மாவட்டச் செயலாளர் கொண்டுவரும் தீர்மானங்கள்."

மாவட்டப் பிரதிநிதிகள் தவறாமல் வருகை தருமாறு, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் நீ. ந. சம்பந்தம் கேட்டுக்கொள்கிறார்.

நெல்லை வட்டார தி.மு. கழகச் செயலாளர்களுக்கு:

"18—8—57 பிற்பகல் 3 மணியளவில் நெல்லை மேலப்பாளையம், பாளையங்கோட்டை, தச்சநல்லூர் ஆகிய கிளைக் கழகச் செயலாளர்கள், பேட்டை உடையார்பட்டி, சிந்துபூந்துறை, முன்னீர்பள்ளம், கொக்கிரகுளம், குறிச்சி ஆகியவற்றிலுள்ள மன்றங்கள், படிப்பகங்களின் செயலாளர்கள் ஆகியோரின் கூட்டமொன்று பாளையங்கோட்டை திருச்செந்தூர் சாலையிலுள்ள வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது நெல்லைக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் வருகையின்போது வரவேற்பு ஏற்பாடுகள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும்"

என, மேலப்பாளையம் தி. மு. க. செயலாளர் வ. இ. என். மீரான் அறிவிக்கிறார்.

கடலூரில் சிறப்புக்கூட்டம்

18—8—57 காலை 9 மணிக்கு கடலூர் நியூ சினிமாவில் தோழர் பி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். எஸ். இராசேந்திரன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சிவகெங்கை பாண்டியன் படிப்பக ஆண்டுவிழா

17—8—57 இரவு 7 மணிக்கு சிவகெங்கை பாண்டியன் நினைவுப் படிப்பகத்தின் மூன்றாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் அரண்மனை வாயில் முன்பு நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுவார்.

நெல்லையில் கழகக் கொடியேற்று விழா

18—8—57 மாலை 5½ மணிக்கு நெல்லை நகர் 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றத்தின் சார்பில், மேற்படி வட்டம் சன்னியாக்குடி தெருவில் தோழர் பி. பத்மநாபன் அவர்களால் தி. மு. கழகக் கொடி ஏற்றிவைக்கப்படும். தோழர்கள் நெல்லை நெடுஞ்செழியன், வ. நாகூர், மு. இரா. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நக்கீரர் பட்டி மன்றம்

17—8—57 மாலை 6½ மணிக்கு மேற்படி மன்றக் கூட்டம் பெத்துநாய்க்கன்பேட்டை முருகேச முதலித் தெரு 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். புலவர் தணிகை உலகநாதன் தலைமையில் திரு. சடகோபன் அவர்கள் 'பெண்பாற் புலவர்கள்' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடு

செப். 21, 22-ந் தேதிகளில் நடைபெறும்

"ஒத்திவைக்கப்பட்டிருந்த வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. மாநாடு, செப்டம்பர் 21, 22-ந் தேதிகளில் நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைத் துவக்கிருயிக்கிறோம். மாநாடு தவறாது மேற்படி தேதிகளில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

அன்பன்

முல்லை-சக்தி

செயலாளர்,

வ. ஆ. மாவட்ட தி. மு. க.

கழகக் கூட்டங்கள்

★

காஞ்சீபுரம்

பிள்ளையார்பாளையம் புதுப் பாளையத் தெருவில்

தி. மு. கழக ஆண்டு விழா

18—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : டி. கந்தசாமி

பேசுவோர் :

என். வி. நடராசன்

கண்ணதாசன்

காஞ்சி-கல்யாணசுந்தரம்

இரவு 10 மணிக்கு 'நச்சுக் கோப்பை' நாடகமுண்டு

★

மரக்காணம்

பெருமாள் கோவில் திடலில்

18—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஆ. தங்கவேலு

பேசுவோர் :

ஆர். எஸ். பாண்டியன்

கோள்கைக்கோ

(டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு

★

தளவாய்ப்பட்டணம்

மாரியம்மன் திடலில்

18—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : நா. கு. மாசாணம்

பேசுவோர் :

கே. ஏ. கிருஷ்ணசாமி

வி. ஆறுமுகம்

★

திருப்பூர்

கருவப்பாளையத்தில்

18—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஜி. பெரியசாமி

கொடி ஏற்றுபவர் :

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

பேசுவோர் :

கோவை-செழியன்

முத்துரத்தினம்

என். பால்ராசு

இரா. சேகநாதன்

★

தோழப்பன் பண்ணை

(திருவைகுண்டம் வட்டம்)

தி. மு. கழகத் துவக்கவிழா

18—8—57 இரவு 8 மணிக்கு

தலைவர்: இராசாப்பாண்டியன்

பேசுவோர் :

எஸ். இரத்தினவேல்பாண்டியன்

டி. ஆர். சுப்பிரமணியன்

கே. நயினார்பாண்டியன்

ஏ. அண்ணாமலை

எஸ். சி. செங்குட்டுவன்

எஸ். பி. முத்து

வி. சேகவீரராசேந்திரன்

★

கடலூர்

மஞ்சை நகர் மைதானத்தில்

18—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : இரே. இளம்வழுதி

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கே. எம். வேலு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. செழி...